Crl. Misc.39

MC - 1/2018

பெயர் - கீதா (எ) காளீஸ்வரி PW – 1

தேதி – 01.10.2018

குறுக்கு விசாரணை

எனக்கும் எதிர்மனுதாருக்கும் 14.11.13ம் தேதி தாராபுரம் ஸ்ரீகோகுல் திருமணமண்டபத்தில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமண செலவை இருவீட்டார்களும் சமமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 17.11.13ம் தேதி எனது தந்தை வெள்ளைச்சாமியிடம் அவர் கொடுத்த கணக்கின் படி முன்பணம் போக பாக்கி தனது பாதி பங்கினை எதிர்மனுதாரின் தகப்பனார் கொடுத்து செட்டில் செய்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. முழுத்தொகையும் எனது தகப்பனார் ஏற்றுக்கொண்டதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் எனது தகப்பார் கொடுத்தால் கொடுக்கிறேன். திருமண செலவை பாதியை எதிர்மனுதாரர் கொடுத்துவிட்டார் என்றும் தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. திருமணத்தின்போது எனது தகப்பனார் போட்டதாக கூறப்படும் 30 பவுன் நகை தற்போது என் வசம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 13 பவுன் மட்டுமே என்னிடம் உள்ளது. மீதி எதிர்மனுதாரர் வசம் உள்ளது. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் திருமணத்தின்போது எனக்கு 5 ½ பவுன் தாலிக்கொடி 4 ½ செயின் ½ மோதிரம் போட்டார்கள் என்றால் எதிர்மனுதார் 5 பவுன் தாலிக்கொடி, 2 செயின், கால் பவுன் மோதிரம் போட்டார்கள். அதனை திருமணம் ஆன அடுத்த நாளே ஈரோட்டில் வைத்து வாங்கிக்கொண்டார்கள். இந்த விபரத்தை நான் தாராபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரிலோ அல்லது மனுவிலோ கூறவில்லை. உண்மையில் அவ்வாறு நடந்திருந்தால் மனுவிலும் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரிலும், முதன்மை சாட்சியத்திலும் கூறியிறுப்பேன் என்றாலும் தற்போது குறுக்கு விசாரணையில் புதிதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. குளிருட்டும்பெட்டி கோவையில் வாங்கப்பட்டது அதற்கான பில் எதிர்மனுதாரின்பெயரில் அவரிடமே உள்ளது. எனது வீட்டில் பிரிஸ் இல்லாமல் கிரைண்டர், கேஸ் அடுப்பு, இன்டக்சன் அடுப்பு மற்றும் சேம்சங் டிவி இருந்தன. இதில் டிவி மட்டுமே எதிர்மனுதாரர் வாங்கியதாகும். மற்ற பொருள்களுக்கான பில்கள் என் அப்பா பெயரில் உள்ளது. அது எதிர்மனுதார் வசம் உள்ள தால் நீதிமன்றத்தில் ஒப்படைக்க முடியாது. மேற்படி பொருள்கள் அனைத்தும் எதிர்மனுதாரால் அவரால் பணம்செலுத்தப்பட்டு வாங்கப்பட்டது என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் கட்டில், பீரோ, மெத்தை மற்றும் பாத்திரங்கள் மட்டுமே வாங்கிக்கொடுத்தார் மற்ற பொருட்கள் எதிர்மனுதாரர் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. திருமணம் முடிந்த அன்றே ஈரோடு சென்றுவிட்டோம். 22.11.13ம் தேதி கோவை சின்னவேடம் பட்டிக்கு குமரேசன் வீட்டிற்கு தனிக்குடித்தனம் சென்றுவிட்டோம். மேற்படி வீட்டிற்கு அட்வான்ஸ் கொடுத்து ஒப்பந்தம் எதிர்மனுதாரர் தான் செய்தார் என்றால் சரிதான். 21.11.13ம் தேதி தாராபுரத்தில் இருந்து நான் எதிர்மனுதாருக்கு போன் செய்து வாழ பிடிக்கவில்லை என்றும் விவாகரத்து செய்துகொள்ளலாம் என்று சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. பின்னிட்டு எதிர்மனுதாரர் பெற்றோர்கள் கோவைக்கு தனிக்குடித்தம் அழைத்து சென்றார்கள் என்று சொன்னால் சரியல்ல. கோவையில் 21.11.13 முதல் 07.03.14 வரை எதிர்மனுதாருடன் ஒன்றாக குடியிருந்தேனா என்றால் 3 ½ மாதம் மட்டுமே குடியிருந்தேன். எங்களது திருமண உறவில் குழந்தை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கோவையில் இருந்தபோது எதிர்மனுதாரிடம் வாழ பிடிக்கவில்லை என்று சொன்னோ என்றால் அவ்வாறு

சொல்லவில்லை. விவாகரத்து செய்ய தயார் என்று சொன்னேே. எதிர்மனுதாரின் சகோதரி ஹேமலாத அவர் கணவருடன் சென்னையில் குடியிருந்து வருகிறார். நான் சென்னைக்கு சென்றதில்லை. அவர்கள் கோவைக்கு வந்ததில்லை என்றாலும் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. செல்வகுமார் இன்ஜீனியராக பணிபுரிந்து வருகிறார். திருமணத்திற்கு முன்பே எதிர்மனுதாரின் பாட்டி உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்தது. 09.12.13ம்தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். எதிர்மனுதாரின் அம்மாவின் தகப்பனார் குப்பண்ணகவுண்டர் 22.01.14ல் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். அவர் தொடர்சிகிச்சை பெற்றாரா என்றால் தெரியாது. இவர்களை எதிர்மனுதாரின் பெற்றோாகள் தான் பராமரித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சூழ்நிலையில் எதிர்மனுதாரின் பெற்றோர்கள் தான் கவனித்து வருவதால் ஒவ்வொரு சனி, ஞாயிரும் கோவை வந்து பிரச்சனை செய்தார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரின் சகோதரி தொலைபேசி மூலமாக அவதுறாக பேசினார் என்பது பொய் என்றால் சரியல்ல. இதற்கான ஆதாரங்களை நீதிமன்றத்தில் என்னால் ஒப்படைக்க முடியாது என்றால் சரிதான். ஐடன் கார் நாங்கள் கொடுத்த ஐந்து லட்சத்த்தில் இருந்து வாங்கப்பட்டது. அந்த காரின் விலை 4 லட்சமாகும். அது 2013 நவம்பரில் வாங்கப்பட்டதாகும். அந்த கார் எதிர்மனுதாரின் தகப்பனார் பெயரில் வாங்கப்பட்டதாகும். நான் வழக்கிற்காக பொய்யாக செல்கிறேன் என்றாலும் அந்த கார் எச்எம்ஓபி தாக்கல் செய்த பின் 2014 நவம்பரில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த கார் ஈரோடு யுஆர்சி நகர் ஸ்டேட் பாங்க் கிளையில கடன் வாங்கி வாங்கப்பட்டது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் பொய்யாக தகவல்களை நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தலை பொங்கலுக்கு ஒரு பவுன் தங்ககாசு மற்றும் பணம் 10,000/— கொடுத்தது பொய் என்றால் சரியல்ல. அப்போது எதிர்மனுதார் எனது தகப்னாரிடம் இரண்டு லட்சம் பணம் கேட்டதாகவும், அதை 3 மாதத்தில் கொடுத்துவிடுவதாக மனுதார் தகப்பனார் கூறியதை அவமனாப்படுத்தியதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் குடும்ப வீட்டை விட்டு கடைசியாக வெளியேறியது 14.03.14ம் தேதியாகும். அதற்கு பினிட்டு இது நாள் வரை நாங்கள் சேர்ந்து வாழவில்லை. எதிர்மனுதார் மனுதாரரோ அவரது பெற்றோரோ உங்களிடம் பணம் கேட்டதில்லை என்று சொன்னால் சரியல்ல. 06.03.14ம் தேதி கோவையில் எதிர்மனுதார் வீட்டிற்கு எனது தந்தை வெள்ளைச்சாமி, தயார்சரஸ்வதி, தம்பி சரவணக்குமார் மற்றும் உடன் நான் சென்று அப்போது தகராறு ஏற்பட்டது என்று சொன்னால் நாங்கள் சென்றது 07.03.14ம் தேதி தான். அப்போது நடந்த தகராரை எதிர்மனுதார் ஆடியோவாக பதிவு செய்து அதனை ஈரோடு குடும்ப நல நீதிமன்றத்தில் தனது தரபப்பு ஆவனமாக பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த பிரச்சனையின்போது நான் எதிர்மனுதாரரை பார்த்து நீ இல்லை என்றால் எனக்கு ஆயிரம் போர் வருவான் உனக்கு யார் வருவார் நீ வேண்டாம் நான் வேறு கல்யாணம் பண்ணிக்குவேன் என்று சொன்னோ என்றால் வேறு கல்யாணம் பண்ணிக்குவேன் என்ற வார்த்தையை கூறவில்லை மற்ற வார்த்தைகளை கூறியுள்ளேன். அப்போது நடந்த வாக்கு வாதத்தில் எதிர்மனுதார் எனது தகப்பனாரிடம் டைவர்ஸ்க்கு யார் கேட்டது என கூறியது எனது தகப்பனாரிடம் நான் டைவர்ஸ்க்கு சொன்னேன் என்று சொன்னால் சரிதான். 16.05.14ம் தேதி நான் எதிர்மனுதாரரை பார்க்க ஈரோடு சென்றபோது அவரது தாயாருடன் ஏற்பட்ட வாக்கு வாதத்தில் அவர் கோபமடைந்து எனது முகத்தில் சூடு தண்ணி ஊற்றியதற்கு நான் தாராபுரம் டாக்டர்.ரகுமான் மருத்துவமனையில் மற்றும் நிவேதா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அதைப்பொறுத்து நான் அப்போது காவல் துறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. ஆதற்கான மருத்துவ சான்றிதழ் என்னிடம் கைவசம் இல்லை. 15.06.14ம் தேதி நான் எதிர்மனுதார் மற்றும் அவர் குடும்பத்தினிர் மீது தாராபரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அப்போது ஈரோடு குடும்ப நல நீதிமன்த்தில் எதிர்மனுதார் விவாகரத்து தாக்கல் செய்து இருந்ததால் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேட காவல் துறையினர் கூறிவிட்டனர். அந்த சமயத்தில் நான் காவல் துறையினர் மூலம் 20.07.14ம் தேதி ஈரோது அனைத்து மகளிர் காவல் உதவி ஆய்வாளரை அழைத்து சென்று நகைகளை வாங்கிக்கொண்டேன். ஈரோட்டிற்கு எனது தகப்னார் தான் போலீசை அழைத்து சென்றார். எதிர்மனுதார் இருந்ததாக

சொன்னார்கள் எனக்கு நேரடியாக தெரியாது. அப்போது பீரோவை உடைத்து தான் நகைகளை எடுத்ததாக சொன்னார்கள் என்றால் போலீசார் சாவி வைத்து திறந்து தான் நகைகளை எடுத்தார்கள். அப்போது அங்கு என்ன நடந்தது என்று எனக்கு நேரிடையாக தெரியாது. அந்த புகாரில் நான் எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தாரும் என்னை வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக கூறியுள்ளேன். அந்த புகாரின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அந்த புகாரில் உண்மை இருந்தால் சட்டப்படி வழக்கு தாக்கல் செய்திருப்பார்கள் என்றும் உண்மை இல்லாததால் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னல் சரியல்ல. என்னுடைய பழிவாங்கும் நடவடிக்கையை பார்த்து எதிர்மனுதார் ஈரோடு குடம்ப நல நீதினம்றத்தில் எச்எம்ஓபி 64/15 வழக்கு தாக்கல் செய்து அது 10.11.17ம் தேதி விவாகரத்து தீர்ப்பு பெற்றார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் மனு தேதியில் இருந்து மனு முடியும் வரை இடைக்கால ஜீவனாம்சமாக மாதம் ஐந்தாயிரம் பெற்றுக்கொண்டேன் என்றால் அதில் 3 மாதம் நிலுவையில் உள்ளது மீதி தொகை பெற்றுக்கொண்டேன். தாராபுரம் உடுமலைரோட்டில் உள்ள நாமகிரி நகர் க.எண் 83 எனது தந்தை வெள்ளைச்சாமிக்கு பாத்தியப்பட்டது. கடந்த 2 ½ வருடத்திற்கு முன்பு எனது தந்தை கட்டினார். எனது தகப்பனார் விவசாயம் செய்கிறார். எனது தகப்பனாருக்கு நானும், ஒரு சகோதரரும் உள்ளோம். 23.06.18ம் தேதி ஈரோடு வழக்கறிஞர் கணேஷ் அவர்கள் எனது தகப்பனார் வசிக்கும் மின்நகர் வீட்டிற்கு தான் எதிர்மனுதார்க்கு பாத்தியப்பட்ட என் வசம் உள்ள நகைகளை திருப்பி அளிக்ககோரி பதில் அறிவிப்பு அனுப்பி உள்ளா என்றால் சரிதான். அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்டு வழக்கறிஞர் மூலமாக 28.06.13ம் தேதி பதில் அறிபிப்பு அனுப்பினேன். அந்த பதில் அறிபிப்பிலும் மின்நகரில் உள்ள என் தகப்பனார் வீட்டில் வசிப்பதாக தான் சொன்னேன் என்றால் சரிதான். நுான் அந்த முகவரில் என் தகப்பனாருடன் தான் இன்று வரை குடியிருந்து வருகிறேன் என்றாலும் தற்போது மனுவில் பொய்யாக தாராபுரம் பீமராயர் வீதியில் குடியிருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாராபுரம் பீமராயர் வீதியில் குடியிருப்பதற்கான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. வழக்கறிஞர் அறிப்பு மற்றும் வழக்கு நடவடிக்கைகள் அனைத்தும் என் தகப்பனாரை கலந்து அவரின் ஆலோசனை பேரில் தான் செய்த வருகிறேன் என்றால் சரிதான்.